**மஹியங்கனை பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 18 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 08 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மஹியங்கனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு போது சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 328,422 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபையினால் ரூபா 712,000 இற்கான ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்ட சபைக்கு உரித்தில்லாத கப் வண்டியின் ஏல விற்பனை வருமானத்தை பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கடந்த வருடத்திற்காக மிகையாக ஒதுக்கியிருந்த ரூபா 361,873 இற்கான முத்திரைக் கட்டண வருமானத்தை திரண்ட நிதியத் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்காக குறைவாக ஒதுக்கியிருந்த ரூபா 1,111,929 இற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி மற்றும் துணைப் பதிவேடுகளுடன் ரூபா 232,583 இனால் இணங்கியிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 18,074,709 ஆகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,282,158 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 103,348,467 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள், பட்டோலைகள், நிலையான வைப்புப் பதிவேடுகள், வைப்புக்களை விடுவித்தல்/ பெறல் பற்றிய விபரங்கள், இருப்பு மெய்மையாதல் அறிக்கைகள், வாடகை வைப்புப் பதிவேடு, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வைப்புப் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 132(ஓ) ஆம் பிரிவு | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 14,725 தொகை செலவுகளுக்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை. |
| (ii) 147(1)(ஈ) ஆம் பிரிவு | மாகாண சபையின் பிரேரணை அங்கீகரித்தலின் மூலம் அனுமதிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்படாமல் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்காக ரூபா 57,000 கட்டணம் ஒன்று அறவிடப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) 115 ஆம் விதி | ரூபா 65,695 தொகை பெறுமதியான மின்சாரத் துணைக் கருவிகளுக்காக 2015 திசெம்பர் 14 திகதி கொடுப்பனவு செய்திருந்த போதிலும், 2016 மார்ச் 31 வரை அப் பண்டங்கள் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) 117 ஆம் விதி | தேவையான வரைபுகள், மாதிரிகள் மற்றும் கூறுவிலை கோரல்கள், அளவைப் பத்திரங்கள் தயாரிக்கப்படாமல் ரூபா 223,280 பெறுமதியான 140 வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தன. |
| (iii) 180 ஆம் விதி | 05 உத்தியோகத்தர்களினால் கூட்டுத்தொகை ரூபா 30,000 தொகையான ஊழியர் பிணை வைப்புகள் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 212 ஆம் விதி | 140 வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக கொள்வனவு செய்திருந்த ரூபா 223,280 தொகை பெறுமதியான பண்டங்கள், இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (v) 218 ஆம் விதி | மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 260 | 140 வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 223,280 தொகை தொடர்பாக வழங்கப்பட்டிருந்த காசோலையில் பெறுவோர் என குறிப்பிட்ட நிறுவனத்திற்கு பதிலாக தனிப்பட்ட பெயர் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 06 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 63,500 இற்கான காலங் கடந்துள்ள வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயம் 4.6 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள சேவையை விட்டுச் சென்றுள்ள 16 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,711 தொகையான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,292,071 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,411,275 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-------------------------------------------------------------

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு பெறவேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 2,729,109 தொகையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ரூபா 2,884,466 தொகை அதாவது 94% அத் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) இலக்கம் 02 – கடல் மீன் பலகைக்காக 2014 மார்ச் முதல் 2014 திசெம்பர் வரை வாடகையாளரினால் வாடகை முறைப்படி செலுத்தப்படாமையால் வாடகை மற்றும் தண்டப் பணமாக ரூபா 112,700 தொகை ஒன்று சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 3,845,558 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,875,549 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

சபைக்குச் சொந்தமான வருமான உழைக்கக் கூடிய இ.போ.ச. பஸ் தரிப்பிடத்திற்கு முன்னர் காணப்படும் கட்டிடத்தில் மற்றும் வேறு தனியார் கட்டிடமொன்றில் காணப்படும் 02 பொது மலசலகூடங்கள் வெளி நபர்கள் இருவரினால் அங்கீகாரம் இன்றி நடத்தப்படுவதுடன் அம் மலசலகூடத்திற்காக தேவையான நீர் மற்றும் கழிவுப் பொருள்களை அகற்றும் நடவடிக்கைகள் சபையின் செலவில் நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் தேசிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ உதவி நிலையத்தின் நிதி ஏற்பாடுகளின் மீது 2014 ஆண்டின் போது ரூபா 9,026,621 தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பைகள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கட்டிட வளவில் மற்றும் அதற்காக கிடைத்திருந்த ரூபா 334,132 தொகையால் ஹலர் இயந்தரம் பயன்படுத்தப்படாமல் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை மற்றும் திண்மக் கழிவுப் பொருள் என்பன மகாவலி கங்கையைச் சார்ந்த பிரதேசம் ஒன்றில் குவிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

-------------------------------------

காட்டு யானைகள் தாக்கும் பகுதி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பை செயற்திட்ட வளவிற்காக யானை வேலி ஒன்றிற்கு பதிலாக கம்பி வலைகளுடனான இரும்பு வேலித் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், காட்டு யானைகளினால் அதற்கு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 2,904,702 தொகையாகும்.

குப்பை செயற்திட்டத்திற்காக கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 237,203 தொகை ஒன்று ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கிணறு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானம் மற்றும் செலவுகளை கட்டுப்பாட்டிற்காக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

பிரதேச சபையினால் வருடாந்தம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

2015 ஆண்டின் போது போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

பிரதேச சபைக்கு சொந்தமான 18 வாகனங்களுக்காக சாரதிகள் இன்மையால் அவ் வாகனம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு